DJRD-3-TA

# இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா? 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு உலக பிரசித்திபெற்ற முன்னணி சித்தாந்த நாத்திகரான Dr. ஆண்டனி ப்ளூ மற்றும் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தின் முன்னாள் பேராசிரியரும் கிறிஸ்தவ சிந்தாந்தமேதையும் வரலாற்றாலருமான Dr. கேரி ஹேபர்மசுக்கும் இடையிலான விவாதத்தை பார்க்கும்படி உங்களை வரவேற்கிறோம், இவர் தற்போது லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தத்தின் பிரிவினுடைய தலைவராக இருக்கிறார், இன்றைய தலைப்பு, “இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா?”

**Dr. ஆண்டனி பிழூ** இல்ல. நா என்ன கேட்க விரும்புகிறேன் என்றால் உண்மையா பவுல் என்னத்தை பார்த்தார். தான் கண்டது உயிர்த்தெழுந்த கிறிஸ்துதான் என்று எதை வைத்து சொல்லுகிறார். ஆனா அவன் அங்கு எப்படி அதை பார்த்தான் ஏன் அவனோடு இருந்தவர்களாக உயிர்த்தெழுந்த இயேசுவை அப்ப பார்க்க முடியல வேறு ஏதும் நடக்கலையே.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக நினைக்கிறார்கள் என்பதை எல்லா விமர்சகர்களும் ஏற்றுகொள்ளுகிறார்கள். இது என்ன பிரச்சனை. சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தான் பார்த்தார்கள் என்றால், மன பிரம்மைக்கு அங்க இடமில்லை, அந்த மாதிரி ஒன்று நடக்க அங்க வாய்ப்பு இல்லை. இது ஒரு மறுக்க முடியாத நிகழ்வு என்று எல்லாருக்கும் தெரியும்.

**Dr. ஆண்டனி பிழூ** இதுக்கு என்ன பேறு பொருந்துன்னு எனக்கு தெரியல. இதுல புரியாத விஷயம் என்னன்னா அங்க ஏதாவது பார்க்கும்படியாக இருந்துச்சா, அது மன பிரம்மையா இல்லையா, அதை என்னன்னு சொல்றது மன பிரம்மையா தரிசனமா இல்ல வேற என்னன்னு சொல்றது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** பவுல் என்ன சொல்றார். அது மன பிரம்மை இல்லை.

**Dr. ஆண்டனி பிழூ** அது அவரோட இருந்தவங்களால பார்க்க முடியலைன்னா, அது மாம்ச சரீரமாக இருந்திருக்க முடியாதே.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவன் கூட இருந்தவங்களால பார்க்க முடியலைன்னு யார் சொன்னது.

**அறிவிப்பாளர்:** கிறிஸ்துவம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தான் நிலை நிற்கிறது. கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர்த்திருந்தால், கிறிஸ்தவம் உண்மையானதாக இருக்கும். அப்படி இல்லாவிட்டார், கிறிஸ்தவம் பொய்யாக இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், உங்கள் விசுவாசம் விருதாவாய் இருக்கும், உங்கள் பிரசங்கமும் வீணாயிருக்கும், நீங்க உங்கள் பாவங்களிலேயே தரித்திருப்பீர்கள். ஜான் அங்கேர்பெர்க் நிகழ்ச்சியின் இந்த மிக முக்கிய விவாதத்திற்கு உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம், இன்றைக்கு நம் மத்தியில் இருக்கிற இரண்டு சிறப்பு விருந்தினர்களும் விவாதங்களில் திறமை யானவர்கள், இயேசு மரிதோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரா? இவர்கள்தான் அது: Dr. ஆண்டனி ஃப்ளூ, இவர் உலகில் பிரசித்திபெற்ற சித்தாந்த நாத்திகர்களில் ஒருவராக கருதப்படுகிறவர்; இவர் 23ற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார் அதில் ஹூமீஸ் நம்பிக்கையை குறித்த சித்தாந்தம், தேவனும் சித்தாந்தமும், மேற்கத்திய சித்தாந்தத்தின் முன்னுரை, நாத்திகத்தை குறித்த யூகங்கள் மற்றும் தேவனை குறித்த பிற சித்தாந்த கட்டுரைகள், சுதந்திரம், அழிவில்லாமை என்பது போன்றவை.

எனது இரண்டாவது விருந்தினர் Dr. ஹபெர்மஸ், பிரசித்திபெற்ற கிறிஸ்தவ சித்தாந்தமேதை மற்றும் வரலாற்றாளர், இவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்த வரலாற்று ஆதாரங்களை தொகுத்து வழங்குவதைல் பிரசித்திபெற்ற நபராக கருதப்பட்டு வருகிறார். கேரி 21 புதகங்களை எழுதியிருக்கிறார் அதில் தி சரித்திர நாயகர் இயேசு: இயேசுவின் வாழ்க்கைக்கான பலங்கால ஆதாரங்கள், அற்புதங்களின் தர்க்காப்பு, தேவன் இருக்கிறார் என்று ஏன் நம்பவேண்டும் என்பவை அடக்கம்.

ஜெண்டில் மென், நீங்க எங்களோட இருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டு வருகிற காரியங்களை கவனிப்போம், Dr. ஹபார்மஸ், கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கிறார்கள், தத்ரூபமா சரீர, பிரகாரமான இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். சரி, நாம மன பிரமையை பற்றி பார்த்தோம். எல்லா விமர்சக மேதைகளும் ஏற்றுக்கொள்ளும் 12 வரலாற்று உண்மைகளை பற்றியும் பார்த்தோம். அதில் முதல் நான்கையும் விரிவாக பார்த்தோம். அதில் ஓரிரு விஷயங்களை மறுபடியும் பார்க்க விரும்புகிறேன். முதலாவது, சிலர் உண்மையாகவே இயேசு சிலுவையில் மரித்தாரா என்று சந்தேகப்படுகிறார்கள். வேறுவிதமாக சொன்னால், டோனி நிகழ்ச்சியின் துவக்கத்தில் ஒன்று சொன்னார், “அவருடைய பிறந்த தேதி நமக்கு இன்னும் கிடைக்கவில்லையே. அவருடைய இறுதி நாட்களின் தேதிகளும் நமக்கு கிடைக்கவில்லையே.” இதை பற்றி என்ன சொல்றீங்க? இயேசு சிலுவையில் மரித்தார் என்று நமக்கு நிச்சயமாக தெரிந்தது எப்படி? அதிலிருந்து துவங்கிடலாம். இதை நிரூபிக்கும் விதமாக புதிய ஏற்பாட்டை தவிர வேறு ஆவணங்கள் இருக்கிறதா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, சிலுவை மரணம் என்பதை குறித்து யோசிக்கும்போது, பலவிதமான கோணங்கள் உடைய பதிவு நம்மிடம் இருக்கிறது, முதலாவதாக, மருத்துவ பதிவு; பலதரப்பட்ட மேதைகளின் அறிக்கைகள் இருக்கிறது; பல விதமான வேதாகமத்திற்கு புறம்பான பதிவுகளும் இருக்கிறது. நா ஏற்கனவை சொன்னே ஜான் டாம்நிக் கிரோசன் மற்றும் மார்க்கஸ் பார்க், இயேசு சேமினரியின் நிறுவனர்கள், இரண்டு பேரும் சொல்லியிருக்காங்க பண்டைய காலத்தில் இருந்த காரியங்கள் எவ்வளவு உண்மையோ அதேபோல இயேசு சிலுவையில் அறையபட்டதும் உண்மை, குறிப்பா கிறிஸ்துவின் வாழ்வில் நடந்தவை. ஏன் அதை சொல்ல வேண்டும்?

சரி, பதினைந்து வருடங்களுக்கு முன்பு அமேரிக்கன் மெடிக்கல் அசோசியேஷனுடைய ஜெர்னல் ல எழுதபட்ட கட்டுரையில் இந்த மருத்துவ உண்மையின் விளக்கம்

கொடுக்கபட்டு இருந்தது, இன்னும் ஏராளமான மருத்துவ கட்டுரைகள் இருக்கிறது உண்மைதான். சிலுவை மரணம் என்பது பெரும்பாலும் மூச்சு திணரலினால் உண்டாகும் மரணம். நூற்றுக்கு அதிபதியோ அல்லது மற்ற யாராவது சிலுவையில் அரையப்பட்டவர்களுக்கு EEG யோ EKG யோ எடுக்க அவசியமில்லை. ஒரு குறிப்பிட்ட நேரம் வரைக்கும் நீங்க சிலுவையில் தொங்கி கொண்டு இருந்தால் – தன்னார்வளர்கள் கண்டறிந்த காரியங்களில் இதுவும் ஒன்று அதாவது அதை 12 நிமிடங்கள் என்று கணக்கிடுகிறார்கள் – இத்தனை நிமிடங்களுக்கு நீங்க சிலுவையில் தொங்கீட்டு இருந்தீங்கன்னா போதும், நீங்க உண்மையாகவே, செத்து போக வாய்ப்பிருக்கு.

அதுமட்டுமில்ல விலாவில் ஈட்டி குத்தப்படுகிற காரியமும் இருக்குது, அதை யோவான் சுவிசேஷத்தில் பார்க்க முடியும் ஆனா இதை வேதாகமத்திற்கு புறம்பாக இரண்டு இடங்களில் உறுதி செய்யப்படுகிறது – ஒண்ணு ரோமார்கள்; இரண்டாவது கிறிஸ்த்வர்கள் – அவங்க இதை விளக்கி சொல்றாங்க. அவங்க இதை தெளிவா எடுத்து சொல்றாங்க.

அதாவது டேவிட் ஸ்ட்ராஸ் என்ற விமர்சகர், பிரபலமான விமர்சகர், அவர் சொல்றாரு இயேசு சிலுவையில் இருந்து எடுக்கப்பட்ட பிறகு அவர் உயிரோடு இருக்காருன்னு சொன்னா, நிச்சயம் அதுல ஏதோவொரு பிரச்சனை இருக்கு. ஏன்னா அவர் ஒருவேளை சீஷர்களுக்கு தம்மை வெளிபடுத்தினார் என்று சொன்னால், நிச்சயமா அவர் உயிரோட இருந்திருக்கணு ஆனா உயிரோட எழுந்திருக்க மாட்டார். அவர் உயிரோடு எழுந்தார் என்பதை அவங்க விசுவாசிக்கலைன்னா, கிறிஸ்தவமே இருந்திருக்காது. இது, அந்த மருந்துகளில் ஒன்று என்றிடலாம்.

நா உங்ககிட்ட பார்க் மற்றும் கிறோசனை பற்றி சொன்னேன். அவங்க எதனால அப்படி யோசித்தாங்க? சரி, அதற்கு பல காரணங்கள் இருக்குது. இங்க அவங்க சுவிசேஷங்களில் அதிக கவனம் செலுத்தினாங்கன்னு நினைக்கிறேன். ஆனா நீங்க கேட்ட இந்த எக்ஸ்ட்ரா வேதாகம பதிவுகள் யெல்லாம், கிட்டதட்ட 17 எக்ஸ்ட்ரா வேதாகம, கிறிஸ்தவமல்லாத ஆவணங்கள் இருக்குது அது இயேசுவின் காலத்திற்கு பிறகு 100-150 ஆண்டுகளுக்குள் எழுதப்பட்டவை. அதில் 12 மட்டும், அதாவது மூன்றில் இரண்டு படங்கு, சிலுவையை பற்றியும் மற்ற விபரங்களை பற்றியும் கூறுகிறது. அதனால, இங்க பவுல்தான் முதல் மேதையாக கருதபாடுகிறார்….

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அதிலிருந்துஏதாவது இரண்டை சொல்லுங்க. வேதாகமத்திற்கு புறம்பான இரண்டு உபகரணங்களை பற்றி சொல்லுங்க.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** வெளிப்புற ஆவணங்கள்: டாசிட்டஸ் இயேசு சிலுவையில் தான் மரித்தார் என்ற உண்மையை குறிப்பிடுகிறார். அவர் சொல்லும்போது பொந்தியு பிலாத்துதான் யூதேயாவின் மீது அதிகாரம் பெற்றிருந்தார் என்கிறார். மேலும் அவர் தைபேரஸ் தான் ஆளுநராக இருந்தார் என்கிறார். அடுத்ததா லூசியன் , பிரபலமான சாட்டிறிஸ்ட், இவர்தான் சிலுவையை பற்றிய சித்தாந்தர் என்று அழைக்கப்படுபவர். அடுத்ததாக மாரா பார்-சேராபியன், இவர் தனது மகனிடம் தமது ஜீவனையே கொடுத்த இயேசுவை போல இருக்க முயழும்படி சொல்லியிருந்தார். ஜோசெபஸ், ஒரு பகுதியில், எது எப்படி இருந்தாலும் பெரும்பாலும் எல்லாருமே சிலுவையின் நிகழ்வுகளை

நம்புகிறவர்களாக இருக்கிறார்கள் சிலுவையில் அவர் மரித்தார் என்கிறார். மேலும் ஜோசெபஸ் டைபெரிஸ் சீசரை பற்றியும் சொல்லியிருக்கிறார். அதனால இவ்வளவு பதிவுகள் இருக்கிறது. மேலும் ஆவிக்குரிய காரியங்களை வெளிபடுத்தும் உபகரணங்கள் பதிவுகளில் இன்னும் பல விஷயங்கள் சொல்லப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல டாலஸ் மற்றும் பெலிகான் இருக்காங்க, இந்த இரண்டு ஞானிகளும் இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது காரிருள் பூமியை மூடியிருந்ததை கூறுகிறார்கள். இந்த மாதிரி நிறைய இருக்குது. அடுத்ததாக பவுல் நாம இரண்டு பேருமே இவரை சிறந்த பதிவாளராக கருதுகிறோம். பவுல் பல இடங்களில் இயேசுவின் சிலுவை மரணத்தை பற்றி சொல்லுகிறார் இதுதான் அவரது பிரசாங்கத்தின் மைய பொருள் என்றே சொல்லுகிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே. ஆனா குரான் இயேசு சிலுவையில் மரிக்கலன்னு சொல்லுது. இதற்கு நீங்க என்ன பதில் சொல்றீங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** 1985ல கேள்வி பதில் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தோம் அந்த கூட்டத்தில் ஒரு மாணவன், அவங்க தவறான கருத்தை பதித்திருப்பார்கள் என்று சொல்லீட்டு, அவங்கள பொறுத்தவரை, “இயேசு சிலுவையில் மரிக்கல என்பதைதான் நம்புகிறார்கள் இல்லையா என்றான்.” உடனே அவன் சூவன் தியரி பயனற்றது என்று சொன்னது தான் நினைவிருக்கு வந்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ஜான் டாம்நிக் கிரோசன், கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பதை ஒப்புக்கொள்ளுகிற நபராக இருந்தாலும், ஒருமுறை அவர் இது குப்பை கோபுரத்தை நாய்கள் கிழித்து தரைமட்டும் ஆக்குவது போன்றது என்கிறார். அவருக்கு இந்த கல்லறையை பற்றிய கருத்தில் முரண்பாடிருந்தது. சரி, இயேசு அடக்கம் பண்ணப்பட்ட அந்த கல்லறை, அதை பற்றி சொல்லுங்க. அதற்கு என்ன ஆதாரம்? முதலாவதாக, அவர் அடக்கம் பண்ணப்பட்டாரா? அவர் கல்லறையில் அடக்கம் செய்ய பட்டாரா? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இதுல, சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா கிறோசனின் சில நம்பர்கள் மட்டும்தான் இந்த கருத்தை அங்கீகரிப்பவர்களாக இருந்தாங்க.இதுக்கு எந்த ஆதாரமும் இல்லை, துளிகூட கிடையாது, இயேசு ஏதோ ஊரு பேர் தெரியாத இடத்துல வீசப்பட்டார் என்று எங்கையுமே கிடையாது. இப்படிதானிருந்தது என்பதற்கு நிறைய பதிவுகள் ஆவணங்கள் இருக்கிறது... இதை எளிமையா சொல்லனுன்னா – சில நொடிகளில் அதை உங்களுக்கு சொல்லுகிறேன் – கிரோசன் இயேசுவை ஏதோ தனி இடத்துல அடக்கம் பன்னீட்டாங்கன்னு சொல்றாரு, ஆனா அதற்கு எந்த பதிவுகளும் கிடையாது. அதுமட்டுமல்ல, பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் எல்லாரும், அதாவது கிறிஸ்தவர்கள் எல்லாரும் தங்களுடைய ஸ்தானத்தில் நின்னுட்டு ஆதாரம் எங்க? ஆதாரம் எங்கன்னு? கேட்கிறதா நினைத்துக்கொள்கிறோம். ஆனா நா யோசிப்பேன், Dr. கிரோசன் என்னதா சொல்ல வர்ராறு இயேசு பொதுவான இடத்துல வைக்கப்பட்டு நாய்கள் வந்து விழுந்துவிட்டது என்கிறாரா, அப்படி சொல்றது சுலபம், அதுக்கு ஒரு ஆதாரத்தை காட்டுன்னு கேட்க முடியும்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், டோனி. இதுவரைக்கும் நாம சரியான வழியில தானா போயிட்டு இருக்கோம்?

**Dr. ஆண்டனி பிழு** ஆமா, ஒரு விஷயத்தை நான் யோசிக்கிறேன் இந்த மாதிரியான காரியங்களுக்கு தேவைபடும் விளக்கங்களை பெற்றுக்கொள்ள நாம சுவிசேஷங்களை மட்டும் தான் பார்க்கணும், இல்லையா? அதுதான் என்னோட கருத்து.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அப்படியா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நா ஒத்துக்க மாட்டேன்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஏ? உங்க நண்பர் கிட்ட அதை சொல்லுங்க.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நிச்சயமா, அவர் கிட்ட சொல்லுவேன். ஆல்ரைட், இரண்டு உதாரணங்கள்: அப்போஸ்தலர் 13. அப்போஸ்தலர் நடபடிகளில் விசுவாசத்தை வெளிபடுத்தும் பகுதிகள், நிறைய இருக்கிறது. மேலும் அப்போஸ்தலர் 13ல அவர் கல்லறையில் வைக்கப்பட்டார் என்றும் தேவன் அவரை எழுப்பினார் என்றும் நமக்கு சொல்லபட்டு இருக்கிறது. (அப்போஸ்தலர் 13:29-30) அப்படின்னா கல்லறை காலியாக இருக்கிறதே.

நம்ம  நண்பர் பார்க்கலாமா, பவுல். 1 கொரிந்தியர் 15, பவுல் இங்க மிகப்பெரிய பட்டியலை கூறுகிறார் அதை “டிரிபிள் ஹாடி கிளாஸ் என்பார்கள்.” எபிரேயத்தில் அப்படிதான் வாசிக்கபடுகிறது.... சரி, எபிரேய எண்ணமது, ஆனா கிரேக்கத்தில் இது, வேறுமாதிரி வாசிக்க படுகிறது: பவுல் சொல்லுகிறார் அவர் வேத வாக்கியங்களின் படி மரித்து ,அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து நமக்கு தரிசனமானார். (1 கொரிந்தியர் 15:3-5)

அப்ப, ஒரு நபர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழும்பி மற்றவர்களுக்கு காட்சியளிக்கணுன்னா எப்படி அடக்கம் பண்ணப்பட்டாரோ அப்படியே எழும்பலன்ற கருத்து ஒத்துவராதே. பவுல் எப்படி அடக்கம்பண்ணப்பட்டாரோ அப்படியே எழுந்தார் என்பதுல ரொம்ப தெளிவா இருக்காருன்னு நினைக்கிறேன். இங்க கவனிக்கும்போது மரிதார், செய்யபட்டார், எழுந்தார் – மூன்று முறை வருகிறது. “அவர் மரித்தார்; அடக்கம்பண்ணப்பட்டார், உயிரோடு எழுந்தார், அவர் தரிசனமானார்.”

அதுமட்டுமில்ல பிலிப்பியர் 3:11 மறுபடியும் பார்க்கணும்: ஏக் அநாஸ்டாசஸ், மரித்தோருலிருந்து உயிரோடு எழும்பி வருவது.” இப்படிபட்ட ஒன்றை நம்புகிற ஒரு பரிசேயனாக இருந்து இப்படி இருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் பொருந்துமா, காலியான கல்லறைக்கு ஆதாரமா பவுலும் இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆமா, இது பின்னுக்கு அழைத்து செல்கிறது. இதை 55ல எழுதியிருந்தால், இதை 51ல பிரசங்கித்திருப்பார்; அப்படியென்றால் பேதுருவிடமிருந்து 35ல கேட்டிருப்பார். பேதுரு இதை வேறொரு இடத்திலிருந்து கேட்டிருக்கலாம், மேலும் எல்லாரும் இதைதான் சொல்லிக்கொண்டு இருந்தார்கள் என்று கூறுகிறார்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆமா. இதை பற்றி அப்போஸ்தலர் 13ல நம்மால பார்க்க முடிகிறதே. ஆனா இப்ப பவுல் காலியான கல்லறையை குறிப்பிடுகிறார். காலியான கல்லறையை விசுவாசிப்பதற்கு இன்னும் வேறு பல காரணங்கள் இருக்குனு நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இந்த ஆதாரங்கள் சொல்லுகிற விஷயங்களை எப்படி நம்புகிறீர்கள். சரி, இயேசு கல்லறையில் வைக்கப்பட்டார், இயேசு மரித்த மூன்று நாட்களுக்கு பிறகு சில நாளுக்கு பிறகு அந்த கல்லறை காலியாக இருந்தது என்று நினைக்க என்ன காரணம்? இதை எதிற்பக்கத்தில் இருந்து பார்க்கலாம்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அது வெறுமையா இருந்துதுன்னு ஏன் நினைக்கணும்?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. வேறுவிதமாக சொன்னால், அது காலியாக இருந்தது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்குது?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஓ, நீங்க என்ன கேப்பீங்கன்னு நினைச்சேன் தெரியுமா, "அது ஏன் காலியாக இருந்தது? அதுக்கு நா வைத்திருக்கும் பதில், "ஏன்னா அவர் உயிரோடு எழுந்துட்டார்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரியா சொன்னீங்க.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி. காலியான கல்லறைக்கான ஆதாரம். இப்ப, நா ஏற்கனவே சொன மாதிரி ஆதிகால பதிவுகள் நம்மிடம் இருக்கிறது: மற்றபடி அப்போஸ்தலர் 13மற்றும் 1 கொரிந்தியர் 15ல் பவுல் கூறிய காரியங்கள் இருக்குது. ஆனா இன்னும் சில விஷயங்களும் இருக்குது. யூதர்கள் காலியான கல்லறையை ஏற்றுகொள்கிறார்கள். இன்னும் வேறு 3 ஆதாரங்கள் இருக்கிறது: மத்தேயு மட்டுமல்ல ஆனா அதோடு ஜஸ்டின் மார்டியர் மற்றும் தேர்டுல்லியனும் இருக்காங்க. இவங்க மூணு பேருமே யூதர்கள் காலியான கல்லறையை ஏற்றுக்கொண்டதாக கூறுகிறார்கள்.

உண்மை என்னவென்றால் இயேசு மரித்த அதே பட்டணத்தில் தான் சீஷர்கள் தங்கள் ஆதிநாட்களில் பிரசங்கித்தார்கள். எல்லாருக்குமே தெரியும் கிறிஸ்தவ பிரசங்கமானது எருசலேமில் தான் முதலில் துவங்கியது. இதை எற்றுகொள்ளாதவர்கள் யாராவது இருப்பாங்களான்னு எனக்கு தெரியல.இருந்தாலும், ஒரு பிரச்சனை இருக்கு. அவர் மரித்த அந்த பட்டணத்தில் இருந்துதான் பின்னாட்களில் அவர்கள் பிரசங்கிக்க துவங்கினார்கள். அந்த கல்லறை காலியாக இல்லாம அவங்க இந்த மாதிரி பேசியிருந்தா அங்கிருக்கிறவங்க சொல்லியிருப்பாங்க, "ஆ, பாருங்க, இதுல சின்ன பிரச்சனை இருக்குது. இது வெறும் ஒரு சரீரத்தை பற்றிய விஷயம் தான்." பிரசங்கத்திற்கு அந்த இடம் ஏற்றதாக இருந்திருக்காது. அவங்க கலிலேயாவிலும் ரோமிலும்தான் பிரசங்கம் பண்ணியிருக்கணும், எருசலேமில் இல்லை. இந்த எருசலேம் பட்டணம் ஒரு ஆதாரமாகத்தான் இருக்கிறது.

இதற்கு ஆதிகால ஆவணங்கள் இருக்கிறது. யூதர்கள் இதை ஒப்புகொள்ளுகிறார்கள். அதுமட்டுமல்ல, சரித்திர விமர்சக கோட்பாடு ஒன்று இருக்கிறது: உங்களுடைய சத்துருக்கள் பொதுவாக உண்மையைத்தான் ஒப்புகொள்வார்கள். இதோட இன்னும் சில விஷயங்களை சேர்த்து சொல்லவும் முடியும். ஒருவேளை ராடல்ப் புல்ட்மேன் சொன்னது சரியென்றால், புதிய ஏற்பாடானது, சுவிசேஷங்கள் அனைத்தும் ஒரு உபகரணமாக மட்டுமே கருதப்பட்டு வந்தால் – சுவிசேஷங்களை கிபி எண்பதுகளில் வாசித்தபடி வாசிக்கப்பட்டால் – அப்ப பெண்களின் சாட்சிகளை ஏற்றுகொள்ள வாய்ப்பு கிடையாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஏன்?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இங்குள்ளவர்களை நான் எந்தவிதத்திலும் குற்றப்படுத்துவதாக நினைக்கவேண்டாம், ஆனா முதல் நூற்றாண்டுகளில், பெண்கள் நீதிமன்றத்தில் சாட்சி சொல்வது அனுமதிக்கப்படவில்லை. யூதர்களுடைய எழுத்துக்களின்படி பெண்கள் பொய்யர்கள். இதுல சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், லூக்கா 24:11, பெண்கள் கல்லறையை பார்த்துவிட்டு திரும்பிவந்து சீஷர்களிடம் சொன்னபோது, இவங்க புரளிய கிளப்பி விடராங்கன்னு தான் நினைத்தார்கள். கட்டுகதையை பரப்புவதாக நினைத்தார்கள். சோ, நா ஒரு கதை எழுதறேன்னு வச்சுக்கோங்க அதை கிபி 30 ல இருந்து கிபி 80 வரைக்கும் எழுதறதா இருந்தா நிச்சயம் பெண்களுடைய சாட்சிகளை எடுத்துகொள்ள மாட்டேன். அதுல இன்னொரு பெரிய பிரச்சனை இருக்கும்.

இதெல்லாம் காலியான கல்லறைக்கான சில ஆதாரங்கள் தான். இதுல பெண்களும் இருக்காங்க. அதோட பவுலினுடைய ஆதிகால பதிவுகளும் இருக்கிறது. யூதர்கள் ஏற்றுகொண்ட ஆதாரமும் இருக்கிறது. எருசலேம் நகரத்தை பார்க்கும்போது, அப்படி இல்லன்னு சொல்ல முடியாது, சரீரம் கல்லறையில் இருக்கும் ஒரு ஊர்ல உங்களால பிரசங்கிக்க முடியாது. நான்கு காரியங்கள் இருக்கு அதற்கு டோனி பதில் சொல்லும்படி விரும்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம் மேலும், டோனி, நாம திரும்ப வந்ததும் நீங்க பதில் சொல்ல போறீங்க. தொடர்ந்து இணைந்திருங்கள்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். மீண்டும் வரவேற்கிறோம் நாம இரண்டு சிறப்பு விருந்தினர்களோடு பேசிக்கொண்டு இருக்கிறோம் நமது தலைப்பு: இயேசு மரணத்தில் இருந்து உயிரோடு எழுந்தாரா? நாம் பேசிக்கொண்டு இருப்பவர்கள் Dr. ஆண்டனி ஃப்ளூ , உலகின் முன்னிலை சித்தாந்த நாத்திகராக கருதப்படுகிறவர். மற்றும் Dr. கேரி ஹேபார்மஸ், இவர் கிறிஸ்தவ சித்தாந்த மேதை மற்றும் வரலாற்றாளராக இருக்கிறார், இவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கான ஆதாரங்களை விளக்கி சொல்லுவதில் சிறப்பு மிக்கவராக கருதப்படுகிறார். இது மிகவும் சுவாரஸ்யமான விமர்சனங்கள் நிறைந்த விவாதம். சரி டோனி, இப்ப நீங்க சொல்லுங்க, இப்ப Dr. ஹேபர்மாஸ் இந்த காலியான கல்லறையை குறித்து சொன்ன ஆதாரத்தை பற்றிய உங்ககருத்து என்ன? அதை நீங்க ஒத்துக்குறீங்களா?

**Dr. ஆண்டனி பிழு** இது எல்லாத்தையும் தற்காத்து சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இந்த உண்மைகள் எல்லாத்தையும் இந்த தலைப்புகளை பற்றி பேச விரும்புகிற அனைவரும் இதற்கு ஆயத்தமாக இருக்கனுன்னு நா நிச்சயம் நினைக்கிறேன் அவங்க ஓடிட கூடாது, "அப்படி சொல்ல கூடாதுன்னு சொல்ல கூடாது. இல்ல. இதுதான் விவாதத்தில் ரொம்ப சுவாரஸ்யமான பகுதி, என்று நினைக்கிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்ப காலியான கல்லறையை ஏத்துக்குறீங்களா?

**Dr. ஆண்டனி பிழு** அதாவது, இது சுவாரஸ்யமான சாட்சி என்றுதான் நினைக்கிறன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** தேன்க் யூ

**Dr. ஆண்டனி பிழு** ஏன்னா, பொதுவா, இதை ஏற்றுகொள்வது என்பது ரொம்ப கஷ்டம்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆரம்பத்துல எனக்கு மட்டும் தான் இப்படி தோனுதுன்னு நினைத்தேன், கல்லறை காலியாக இருந்திருந்தா, மண் பிரம்மை என்ற ஒன்று எப்படி இருந்திருக்க முடியும்? ஏன்னா மன பிரம்மை உண்டாக அந்த சரீரம் கல்லறையில் தான் இருந்திருக்கணும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இப்ப, என்னோட முதல் கேள்வி, "அந்த சரீரத்திற்கு என்ன நடந்தது?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அது உங்களுடைய கேள்வி.

**Dr. ஆண்டனி பிழு** சரி, இதற்கு தனிப்பட்ட சாட்சிகள் ஏதும் இல்லை. அந்த சரீரத்தை அங்கிருந்து எடுக்க பலவித வழிகள் இருக்கிறது. நா ஒரு சூத்திரத்தை இங்க சொல்ல போவது கிடையாது ஏன்னா அநேக வருடங்களுக்கு முன்பாக அந்த பட்டணத்தில் நடந்த விஷயத்தை யாராலும் மாற்றி அமைக்க முடியாது என்று நான் நினைக்கிறன் அன்னைக்கு இன்று இருக்கிறது போல கேமராக்களும் மற்ற உபகரணங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை அதனால போதிய ஆதாரங்கள் நம்மிடம் இல்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், கேரி, இப்ப உங்களோட புத்தகத்துல, இப்ப சில நிமிடங்களுக்கு உங்க புத்தகத்தை பார்க்க விரும்புகிறேன், தி ஹிஸ்டாரிகள் ஜீசஸ், சரியா. ஒரு முழு அத்தியாயம் முழுக்க நீங்க டோனியின் நண்பர்கள் மற்றும், மற்ற இயற்கையாளர்கள், மற்றும் பலர் அந்த சரீரத்திற்கு என்ன நடந்திருக்கும் என்று பகிர்ந்துகொள்ளும் சகல விதமான கருத்துக்களையும் சொல்லியிருக்கீங்க. இரண்டு நிமிஷத்துல அதை துரிதமா சொல்லுங்க பார்க்கலாம். முக்கியமான குறிப்புகளை குறித்து சொல்லுங்க.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, பல விஷயங்களை பற்றி பேசினோம். சிலர் இயேசு சிலுவையில் மரிக்க வில்லை என்று சொல்லுகிறார்கள், இருந்தாலும் இன்றைக்கு பெரும்பாலான மேதைகள் அப்படி சொல்வது கிடையாது. ஆனா சிலர் இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்று சொல்வார்களானால், அதற்கு மருத்துவ பதிவுகள் இருக்கிறது, அதற்கு நீங்க பவுலை தான் பார்க்க வேண்டும், அதறக்கு வேதாகமத்திற்கு புறம்பான ஆதாரங்களிருக்கிறது. சுவிசேஷங்கள் இருக்கிறது. இன்னும் பல ஆதாரங்கள் இருக்குது. நீங்க ஏற்கனவே கேட்டீங்க, " சீஷர்கள் பொய் சொன்னாங்களா?"அப்படிதான், சிலர் நினைக்கிறாங்க. ஆனா அவர் சொன்னார், "அப்படியில்லை."

சிலர் சீஷர்கள் இயேசுவின் சரீரத்தி திருடி வைத்துகொண்டு அவர் தரிசனமானார் என்று போய் சொன்னதாக சொல்லுகிறார்கள். இது சரியா வராது ஏன்னா அவங்க மறுரூபமாகியிருந்தார்கள். அவங்க எது உண்மையென்று நம்பினார்களோ அதற்காக தங்கள் ஜீவனையும் கொடுத்தார்கள். நாம மன பிரமையை பற்றி பேசினோம். அது ரொம்ப முக்கியமான கோணம் தான் ஏன்னா அதுதான் இவருடைய ஆதாரமா இருக்குது. சிலர் இது எல்லாமே கட்டு கதை என்று சொல்றாங்க, அது பெரிய பிரச்சனையா இருக்குது, ஏற்கனவே இருந்த பதிவுகளில் சொல்லப்பட்டது போல பவுல் என்ற நபர் இருக்காரு, இது உண்மையான சம்பவமாக இருக்கு, ஒருவேளை நீங்க கண்ணார கண்ட

சாட்சிகளை விட்டுட்டு கொஞ்சம் கடந்த காலத்தை பின்னுக்கு தள்ளி வைக்கலாம். அதாவது, உதாரணமாக, அலெக்சாண்டர் தி கிரேட் அவருடைய இரண்டு சுய சரிதைகளும் அவருடைய காலத்திற்கு பிறகு 3 நான்கு நூற்றாண்டுகளில் எழுதப்படவில்லை. அந்த நாட்களுக்கு பிறகுதான் இந்த மாதிரியான கற்பனை கதைகள் தோன்றினது, அலெக்சாண்டர் பற்றிய அற்புத கதைகள் சொல்லப்பட்டது, சொல்லபோனா, இது கிறிஸ்தவத்திற்கு பின்னால வந்தது. அவர் கிறிஸ்துவிற்கு பின் வாழ்ந்தவர் நான்காம் நூற்றாண்டில் இருந்தார்.

அப்ப, சகாப்தம்,என்று சொன்னால் அதற்கு சாட்சிகள் இருக்கணும், அதுதான் பெரிய பிரச்சனை. அதனால இந்த பதிவுகளுக்கு எல்லாம் ஆறு முதல் எட்டு பேராவது இயற்கையின் கொள்கைப்படி தவறு என்று சொல்லணும் ஆனா இதுதான் ரொம்ப அவசியமானது என்று நினைக்கிறன் ஏன்னா இன்றைக்கு மன பிரம்மை என்ற ஒன்றை பார்க்கிறோம் அதோட காலியான கல்லறை எனபது இன்னொரு பெரிய பிரச்சனைன்னு நினைக்கிறன். ஏன்னா இப்ப டோனியிடம் இரண்டு கொள்கைகள் இருக்கிறது. அது மன பிரமையாக இருக்கும் என்கிறார்... சரி, உண்மையில், மூன்று விஷயங்களை சொல்றார். அதாவது பவுளினுடையது ஒருவிதமான மன பிரம்மை; இன்னொன்னு சீஷர்களுக்கு ஏற்பட்ட மன பிரம்மை; அதை தான் அவர் சொல்லுகிறார். இப்ப சரீரம் மற்றும் கல்லறையை குறித்த விஷயத்தில் இவருக்கு பிரச்சனை இருக்குது. சரியா தான் சொல்றாரு, சடலங்கள் பலவிதமான காரணங்களுக்காக கல்றைக்ளில் மாற்றிவைக்கப்படும்; இருந்தாலும், இவர் சொல்றதுபடி பார்த்தா சரீரம் கல்லறையில் இருந்து மாற்றிவைக்கபடும் அதே சமயத்தில் சீஷர்கள் அவர் தரிசனமாவதை பார்த்திருக்க கூடுமோ. அது, மட்டுமில்ல, அடுத்து பவுல் இருக்கிறார். இப்ப என்ன நடக்குதுன்னா இந்த கொள்களைகள் எல்லாத்தையும் அவர் சேர்த்துட்டே போறாரு எதுவும் பொருத்தமான கொள்கையாக இல்லை என்று தான் நான் நினைக்கிறன், நீங்க சரியா பொருந்துகிற காரியத்தை சொல்லனும்..

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஏதாவது ஒரு கட்டுத்துல அவர் இதை பற்றி ஏதாவது கட்டுரை எழுதியிருக்கிறாரா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** எப்போதாவது, எப்போதாவது.

**Dr. ஆண்டனி பிழு** கவனிங்க, என்ன நடந்தது என்பதற்கு நா இயற்கையான பதிவுகளை சொல்ல வரல. அதற்கு முயற்சிக்கவும் இல்லை...இதுக்கு திருப்திகரமான எந்த விஷயத்தையும் சொல்றது சாத்தியன்னு எனக்கு தோனல.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆனா நீங்க இரண்டு மனபிரம்மை கொள்கைகளை ஒத்துக்குறீங்க.

**Dr. ஆண்டனி பிழு** ஆனா இந்த மன பிரமையானது பலவிதமான பதிவுகளை கொண்டிருக்கிறது என நினைக்கிறேன். ஆனா காலியான கல்லறை என்ற ஆதாரத்தை சொல்லுகிற எந்த பதிவும் எங்கிட்ட இல்லை.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டோனி, ஒரு குழுவினருக்கு உண்டாகும் மனபிரம்மையை நீங்கள் நம்புகிறீர்களா?

**Dr. ஆண்டனி பிழு** இதுக்க்கு அது ரொம்ப அவசியம் என்று நா நினைக்கல. ஆனா சுவிசேஷங்களில் சொல்லப்பட்டது போல ஒரே சமயத்தில் குழுவான மக்கள் பார்த்த விஷயம் மற்றும் தனித்தனியாகவும் சேர்ந்து பார்த்த காரியங்கள் என்பதை முடிவு க்கு கொண்டு வர்றது அவசியம். அதாவது, இந்த காரியங்கள் எல்லாம் பிற்பாடு சொல்லப்பட்டது என்பதை கவனிக்கணும், :பன்னிரண்டு பேரும் பார்த்திருக்காங்க. இந்த அனுபவம் ஏற்பட்டபோது எல்லாரும் ஒண்ணா இருந்தாங்கன்னு சொல்றது ஏற்றுகொள்ள முடியாத ஒரு கூற்றாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நீங்க என்ன நினைக்கிறீங்க, கேரி?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** டோனி தன்னை ரொம்ப சூடாக்கி கொள்கிறார் என்று நினைக்கிறன். முதலாவதாக, காலியான கல்லறை இதற்கு எதிராக சொல்லல அவருக்கு எந்தவித கருத்தும் இல்லை. இரண்டாவது, சீஷர்களுக்கு மனபிரம்மை உண்டானது என்கிறார் அது நா சொன்ன காரணங்களில் எதற்குமே பொருந்தாததா இருக்குது. குழுவானவர்கள் மனபிரம்மையை பெற முடியாது. அவங்க சரியான மனநிலையில் இல்லை. இங்க பலவிதமான இடங்களில், நேரத்தில், பலவிதமான மக்கள், ஆண்பெண், பலவிதமான காரியங்களை செய்துட்டு இருந்தாங்க. காலியான கல்லறை, அது வாழ்கையை மாற்றாது. யாக்கோபு, பவுல். நிறைய காரணங்கள்.

பிரம்மை என்பது ரொம்ப அரிதான ஒன்று. அது ஏற்பட கூடிய நிலைகளை நான் உங்களுக்கு சொல்லுகிறேன். சரீரபிரகாரமான பிரிவு அல்லது போதைக்கு அடிமைப்படும்வது. இதுல எதுவும் சீஷர்களுடைய நிலை இல்லை. அதனால குழுவினருக்கு உண்டான மன பிரமை இல்லை என்கிறார், ஆனா 10 அல்லது 20 பேருக்கு ஒரே நேரத்தில் மனபிரம்மை உண்டாவதற்கு எந்த மருத்துவ சான்றும் இல்லை. ஆனா எல்லாருக்கும் ஒரே விதமாக தோன்றியிருக்க வேண்டும். இது ரொம்ப முக்கியமான விஷயம்னு நினைக்கிறன்.

**Dr. ஆண்டனி பிழு** நான் சொல்ற விஷயங்கள் நடக்க வாய்ப்பே இல்லை என்று எனக்கு தோன்றினால் நிச்சயம் எல்லாத்துக்கும் நா விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியமா இருக்கும்; இது முழுவதும் தத்ரூபமாக அங்க நடந்த விஷயங்களாக தான் இருக்கிறது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நல்ல வேலை செய்தீங்க, ஏன்னா இவர பொறுத்தவரை எல்லாருக்கும் ஒரே மாதிரியான மனபிரம்மை தான் உண்டாயிருந்தது.

**Dr. ஆண்டனி பிழு** ஒரு நிமிஷம் இருங்க. இன்னொரு காரியத்தையும் நா கடந்த பதினைந்து வருடங்களாக கவனித்து வருகிறேன் ஒன்று அல்லது இரண்டு தத்ரூபமாக எல்லாருக்கும் ஒரே மாதிரியான காட்சி தோன்றியிருக்கிறது: அது பாத்திமாவின் அற்புதம் என்று நினைக்கிறேன், உங்களுக்கு தெரியுமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இல் மேட்ஜுகார்ஜி

**Dr. ஆண்டனி பிழு** அதுல நிறைய பேர் இல்ல. எத்தனை பேர் இருந்திருப்பாங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** யூகோஸ்லாவியா

**Dr. ஆண்டனி பிழு** ஆமா. அதுல எத்தனை பேர் இருந்திருப்பாங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** பத்தாயிரம் பேர் இருந்திருப்பாங்க. ஆனா இதுலயும் பாத்திமா சம்பவத்திலும் இருக்கிற பிரச்சனை என்னன்னா இங்க மக்கள் எல்லாரும் மரியாளுடைய ஆவியை பார்த்ததாக சொல்றாங்க ஆனா இது சீஷர்கள் பார்த்த காரியத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்குது. ஏன்னா இங்க மக்கள் லூர்ட்ஸ் போறாங்க பாதிமா அலல்து மேட்ஜோகார்ஜி போறாங்க. இங்க சுமார் பத்தாயிரம் பேர் பார்த்துட்டு இருந்தாங்க பிள்ளைங்க கூட மரியாளை பார்த்தாங்க. இங்கிருத்த பிரச்சனை என்னன்னா, இந்த பத்தாயிரம் மக்கள் கூட்டமும் வானத்தில் சில அடையாளங்களை தவிர வேற எதையுமே பார்க்கல, ஆனா அவங்க மரியாளை பார்க்கல. அதுமட்டுமில்ல, அவங்க இயேசுவை பார்க்கல.

**Dr. ஆண்டனி பிழூ** ஆனா பிரம்மைகள் எனபது வானத்தில் நடக்கிற காரியங்களை பார்ப்பதா, அது சரியா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அது ஒரு கற்பனை, இருந்தாலும், மனபிரம்மைன்னு சொல்ல முடியாது. சூரியன் நகர்கிறது என்று நீங்க சொல்வீங்களா... ஞாபகமிருக்கட்டும் இந்த கற்பனை காட்சிக்கும் பிரம்மைக்கும் உள்ள வித்தியாசத்தை கெண்ட்ஸ் விளக்கிஇருகிறார். கற்பனை என்பது ஒரு காரியத்தை பார்ப்பீங்க ஆனா நினைக்கிறது வேற வொன்றாக இருக்கும். பிரம்மை என்பது எந்தவொரு காரியமும் காணப்படாத போது உண்டாவது. அப்ப மேட்ஜூகொர்ஜீயில் நின்றுகொண்டிருந்த மக்கள் எல்லாரும், வானத்துல ஒரு அடையாளத்தை பார்த்ததாக சொன்னாங்க, ஆனா சொல்லப்போனா, நட்சத்திரங்கள் இருந்திருக்கும், மரங்கள் இருந்திருக்கும், சிகரங்கள் இருந்திருக்கும், சூரியன் இருந்திருக்கும். அவங்க என்ன சொல்றாங்க, சூரியன் நகர்கிறது நட்சத்திரங்கள் நகர்கிறது, ஆனா அது சூரியன்தானா நட்சத்திரங்கள் தானா. இது நாங்க மரியாளை பார்த்தோம் என்று சொல்வதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். அதாவது, என்ன சொல்றேன்னா மேட்ஜூகொர்ஜியில் 99.9% மக்கள் நிச்சயமா மரியாள பார்க்கல .

**Dr. ஆண்டனி பிழூ** இல்ல, இல்ல.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆனா சீஷர்களை பொறுத்தவரை, ஒரு குழுவினர் இங்க இயேசுவை பார்க்கறாங்க. இதுவும் அதும் ஒன்று என்று யோசிக்க வேண்டாம். அபப்டி செய்தால் அதுல பெரிய பிரச்சனை இருக்குனு நினைக்கிறன். அது ஒரு குழுவிற்கு ஏற்பட்ட பிரம்மை என்று எனக்கு தோன்றவில்லை. அது குழுவாக பார்த்த கற்பனை காட்சியா, கற்பனை என்று சொன்னால், அங்க ஏதாவது பார்க்கும்படியாக இருந்திருக்க வேண்டும், நெடுஞ்சாலையில் தண்ணீர் இருப்பது போல, அல்லது உங்களோட தொப்பிய கட்டிலுக்கு பக்கத்துல மாட்டிவைத்துவிட்டு பாதி ராத்திரி தூக்கத்துல எழுந்து யாரோ அங்க நிக்கிறமாதிரி தோன்றுவது; அல்லது மாயவித்தை. இதெல்லாம் கற்பனை தோற்றம். ஆனா பிரமை எனபது முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயம், அதனால நா என்ன சொல்றேன். 12 அல்லது 15 அல்லது 20 பேருக்கு ஒரே விதமான பிரம்மை உண்டாகிறது என்று சொன்னால், அது சாத்தியமாகாது, அதை நிரூபிப்பது கடினம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, கடந்த பதினைந்து வருடங்களாக டோனி இதை பற்றிதான் சிந்தித்து கொண்டு இருக்கிறார், நீங்களும் டோனிய பத்திதா சிந்தித்துக்கொண்டிருந்தீங்க, அப்படிதானே?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆமா. நா இப்ப தொனிய பத்தி யோசித்திட்டு இருக்கேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவரிடம் நீங்க என்ன சொல்ல விரும்புறீங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, விசேஷமான விதத்துல ஒன்றை சொல்ல நினைக்கிறன் ஏன்னா, நேயர்களே, நா நிறைய நாத்திகர்களிடம் பேசியிருக்கேன், இறைநம்பிக்கை அற்றவர்களிடம் பேசியிருக்கேன். நா இரண்டு மூன்று ஐந்து ஆண்டுகள் தொடர்பு கொண்டு இருந்திருக்கேன். தேவன் இருக்காரா இல்லையான்னு யோசிக்கிறவர்களோடு எட்டு ஆண்டுகளாக தொடர்பில் இருக்கிறேன். ஆனா டோனி, இதை ரொம்ப உறுதியா சொல்றேன், டோனி ரொம்ப கனிவானவர், நீதியனவர், எனக்கு தெரிந்து ரொம்ப உறுதியான நாத்திகர். நாங்க 15 ஆண்டுகளாக நண்பர்களாக இருந்து வருகிறோம். 1985ல என்னோட இரண்டு வயது மகள் அவருடைய காலில் அமர்ந்திருக்கும் புகைப்படம் இருக்கிறது. அவளுக்கு குட்நைட் முத்தம் குடுக்காம அவள தூங்க விடமாட்டாரு. இப்ப அவளுக்கு பதினேழு வயசு. இன்னும் அதுக்கு முன்னாலையும் பின்னலையும் எடுத்த புகைப்படங்கள் இருக்குது. அதாவது, இவர் ஒரு நல்ல மனிதர். ஆனா 15 ஆண்டுகளா நா அவருக்காக ஜெபித்துக்கொண்டு இருக்கிறேன். டோனி, எதுவுமே அசாத்தியமில்ல, தோழா.

**Dr. ஆண்டனி பிழு** ஏதாவது ஒரு கட்டத்தில், நாம பரிசுத்த பவுலை பார்க்க முடியுமா? எனக்கு புரிந்த வரைக்கும், தமஸ்குவுக்கு போகிற வழியில் என்ன நடந்தது என்றால் அவருக்கு ஒரு அனுபவம் உண்டானது ஆனா அவரோடு கூட வந்தவங்களுக்கு குரல் மட்டும் கேட்டுச்சே தவிர வேற எதையும் அவங்களுக்கு தோனல.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இதோட இந்த நிகழ்ச்சியை நிறைவு செய்திடலாம். இந்த கேள்வியோடு நம்முடைய அடுத்த நிகழ்ச்சியை நாம் துவங்கிட இருக்கிறோம், அதனால் தொடர்ந்து இணைந்திருங்கள்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.